Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 7/2023

**DEPOSITION OF ACCUSED SIDE WITNESS No.1**

| Name: | செல்வராஜ் | Calling: | விவசாயம் |
|---|---|---|---|
| Father's Name: | முருககவுண்டர் | Religion: | |
| Village: | கொத்தக்கோட்டை | Age: | 55 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 04.08.2026. நேரம்: 03.06 PM

(1,2,5 எதிரிகள் ஆஜர் . 3 ம் எதிரி ஆஜரில்லை, குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 4ம் எதிரி இறந்துவிட்டதால் அவருக்கு எதிரான வழக்கு அற்றுப்போய்விட்டது.)

எ.சா.1 அரசுதரப்பில் குறுக்கு விசாரணை.

தேவராஜின் அம்மாவும் எனது அம்மாவும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். அதனால் நானும் ஒன்றாம் எதிரியும் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். சத்தம்கேட்டு நான் சென்று பார்த்தபோது கூட்டம் கூடியிருந்தது என்றால் அதிகமாக கூடவில்லை. சம்பவம் நடந்த இடத்திற்கு பக்கத்தில் நீர் ஓடை புறம்போக்கு இடம் உள்ளது என்றால் சரிதான். அவற்றை ஆக்கிரமிப்பு செய்வதாக கூறி புகார்தாரர் சென்று கலெக்டரிடம் மனுக்கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆக்கிரமிப்பு செய்தவர்களில் எதிரிகளும் உட்பட்டவர்கள் என்பதாலும் அவர் அதில் பாதிக்கப்பட்டவர்கள் என்பதாலும் புகார்தாருக்கும் எதிரிகளுக்கும் இடையே பிரச்சனை இருந்தது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சென்று பார்த்தபோது இருதரப்பினரும் சண்டையிட்டு அடித்துக்கொண்டார்களா என்றால் ஆமாம். மரத்தை வெட்டிக்கொண்டிருந்தார்கள். அதில் இருத்தரப்பினருக்கும் காயங்கள்

ஏற்பட்டதா என்றால் மணி என்பவரை ஆனந்தன் கையில் வெட்டிவிட்டார், இரத்தம் அதிகமாக வந்ததால் அதை தடுப்பதற்காக சிவலிங்கம் வந்தார். சிவலிங்கத்தை மோனிஷ் என்பவர் மண்வெட்டியால் அடித்துவிட்டார். அதனால் அவருக்கு மோதிரவிரலில் இரத்தகாயம் ஏற்பட்டது. எதிரிதரப்பில் மணி, தனலட்சுமி, சிவலிங்கம் , வேல்முருகன் ஆகியோருக்கும் புகார்தாரர் தரப்பில் மீனா, மோனிஷ், அரவிந்த், ஆனந்தன் ஆகியோருக்கு அடிப்பட்டதா என்றால் அடிப்பட்டதை நான் பார்க்கவில்லை. விழுந்து எழுந்து போன போது அடிப்பட்டது அதை நான் பார்த்தேன். தேவராஜ் என்பவரின் அப்பா மணி தான் இன்னொரு வழக்கில் புகார்தாரர் என்றால் சரிதான். அதைப்பற்றி போலிசார் வந்து விசாரித்தார்கள் என்றால் விசாரித்தார்கள், என்னை விசாரிக்கவில்லை. நான் சம்பவத்தை பார்த்திருந்தால் 1ம் எதிரியின் தந்தை கொடுத்த புகார்வழக்கிற்கு நேரில் பார்த்தேன் என்று போலிசாரிடம் விசாரிக்கும் போது கூறியிருப்பேன் என்றாலும் தற்போது எதிரிகள் எனக்கு நெருங்கிய உறவினர்கள் என்பதால் புதிய சங்கதிகளுடன் பார்க்காத விவரத்தை பார்த்ததாக கூறி உண்மைக்கு புறம்பான சங்கதிகளை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல, நான் நேரில் பார்த்தேன்.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) செல்வராஜ்

SRIPATHI K

SRIPATHI K
2026.08.04
18:09:08
+0530